பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 1 ரபி அவ்1 4 இதழ் 3
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-2-78

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1978-2-13
PERIODICALS DIVISION

## அறிவித்தல்

கோழிப்பண்ணை காரரிடமிருந்து முட்டைகள் 63 சதத்திற்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்கப்படும்

**கண்ணன்களஞ்சியம்**

(மில்க்பாருக்கு அருகில்)
40 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆஸி.யில்ஜே. ஆர்.

சிட்னி, பெப். 12

இன்று காலை 7-15க்கு இங்கு வந்து சேர்ந்த இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, நாளை ஆரம்பமாகும் பொதுநல அமைப்பு நாடுகளின் மகாநாட்டில் முக்கிய உரை நிகழ்த்துவார்.

மகாநாடு, ஹில்டன் ஹோட்டலில் நாளை ஆரம்பமாகிறது.

இலங்கை ஜனதிபதியையும், அவரது பாரியாரையும் கௌரவிக்கும் முகமாக இன்று மாலை ஆஸ்திரேலியப் பிரதமர் தேநீர் விருந்தளித்தார். இலங்கை ஜனதிபதியும், ஆஸி. பிரதமரும் சுமார் 45 நிமிட நேரம் வரை பல்வேறு விஷயங்கள் குறித்தும் இன்று ஆலோசனை நடத்தினர்.

பொது நல அமைப்பு நாடுகளின் அடுத்த மாநாட்டை இலங்கையில் நடத்தவேண்டுமென்று ஆஸி. பிரதமர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

# யாழ். நகரத்தில் சேதமடைந்த இடங்களை கமிஷன் பார்வையிட்டது

[யாழ்ப்பாணம்]

**யாழ்ப்பாணத்தில், கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற கலவரத்தில் சேதமடைந்த கடைகளையும், சிலைகளையும் சன்சோனி கமிஷன் நேரில் பார்வையிட்டது.**

சன்சோனி கமிஷன் தலைவர் திரு. எம் சி சன்சோனியுடன் யாழ்ப்பாணம் எம் பி திரு யோகேஸ்வரன் கமிஷன் செயலாளர் திரு டிஸா தெய்வேந்திரா, உதவி சொலிஸிட்டர் ஜெனரல் சில்வா, அரசசட்டத்தரணி எஸ் இராமநாதன், சட்டத்தரணி ஆர் விஸ்வநாதன், சட்டத்தரணி த. சோமசுந்தரம் அகதிகள் புனர்வாழ்வு கழக செயலாளர் திரு. நித்தியானந்த ஆகியோர் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு, இடங்களைப் பார்வையிட்டனர்.

### வள்ளுவர் சிலையை முதலில் பார்த்தனர்

சத்திரத்துச் சந்தியில்உள்ள வள்ளுவர் சிலையை முதலில் பார்வையிட்டனர். அதன்பின் பழையமார்க்கட்டை பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணம் எம் பி திரு வெ யோகேஸ்வரனும் மற்றும் சட்டத்தரணிகளும கமிஷன் தலைவருக்கு சேதமடைந்த இடங்களைச் சுட்டிக்காட்டினர்.

ஔவையார், சோமசுந்தரப் புலவர் சிலைகளையும் பஸ் நிலையத்தின் முன்னல் கடைகள் எரிந்த இடங்களையும், கமிஷனர் பார்வையிட்டார்

### எரிந்த கடையையும் பார்வையிட்டனர்

நவீன மார்க்கட்டில் எரிந்த கடையொன்றையும், கமிஷனர் பார்வையிட்டார்.

கமிஷன் பார்வையிட்ட போது ஆயிரக்கணக்கான மக்கள் சுற்றி நின்றனர். இதனல் போக்கு வரத்து சிறிது நேரம் தடைப்பட்டது. போக்கு வரத்து பிரிவு இன்ஸ்பெக்டர் திரு சேனுதிராசா தலைமையில் பொலிஸ் கோஷ்டியினர், கூட்டத்தினரை அருகில் செல்லவிடாமல் போக்குவரத்து ஒழுங்குகளை கவனித்தனர்.

சுபாஸ் கபே, மற்றும் சேதமடைந்த கடைகளின் பெயர்ப் பலகைகளையும், கமிஷனர் பார்வையிட்டார் (க)

# "சகல மாகாணங்களிலும் இந்துக்கள் வாழ்கின்றனர்"

## இந்து இளைஞர்மன்ற சப்மேளனம் சார்பில் சட்டத்தரணி உரை

(கா. யோகநாதன்)

(யாழ்ப்பாணம்)

"இந்நாட்டில் பௌத்த மதம் என்று சொல்லிக்கொண்டு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறதே யொழிய, பௌத்த தர்மத்தின் போதனைகள் நடைமுறையில் இல்லை.

எனவே அரசின் செயலிலும் தனிப்பட்ட மனிதன் செயலிலும் அன்பு தோன்றக்கூடிய முறையில் இனிமேல் அமைய வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே தங்கள் முன்னிலையில் சாட்சியங்களையும், தஸ்தாவேஜுகளையும் சமர்ப்பித்து இப்படியான மக்களின் கண்களைத் திறக்க முன்வந்துள்ளோம்."

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சன்சோனி கமிஷன் முன்னிலையில் இந்து இளைஞர் மன்றச் சம்மேளனம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பாலசுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:

"இந்தச் சம்மேளனத்தில் 75 சங்கங்களும், 10,000 உறுப்பினர்களும் உள்ளனர் 28 லட்சம் இந்துக்களின் எண்ணங்களைத்தான் பிரதிபலிக்கப்போகிறேன்.

"இந்து மதத்தின் புனிதத் தன்மையை மகாவம்சத்தில் இருந்தே இலகுவாக அறியலாம். தேவையேற்படின் இந்து மதத்தின் புராதனத் தன்மை பற்றி நிபுணர்களின் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கவிருக்கிறோம்.

"துட்டகெமுனுகூட, தமிழ்த் தெய்வமான கதிர்காமக் கடவுளை வணங்கிவிட்டுத்தான் எல்லாள மன்னனுடன் போர் தொடுத்தான்.

"இலங்கையில் புராதனத் தன்மை வாய்ந்த கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், மாமங்கேஸ்வரம் ஆகிய 5 ஸ்தலங்களும் சரித்திர ஆசிரியர் ரொலமியினல் விபரிக்கப்பட்டுள்ளன. சிவஒளிபாதமலையும் உண்டு. இவற்றைத் தரிசிக்க வெளிநாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வருவதுண்டு.

### தெய்வீகத் தன்மை வாய்ந்தது

"இந்து மதம், மனிதன் ஆரம்பமான காலம் முதல் தெய்வீகத் தன்மை வாய்ந்ததெனக் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட மனிதன் ஏன் மிருகமாக மாறினன்?

"அமெரிக்காவில் இந்துக் கோவில் கட்டப்படும்போது இந்நாட்டிலுள்ள இந்துக் கோயில்களை ஏன் உடைக்க வேண்டுமென்பதுதான் இலங்கைக்கு வெளியிலுள்ள கோடிக்கணக்கான இந்துக்களின் சிந்

(6-ம் பக்கம் பார்க்க)

அச்சுவேலி கொள்ளை வழக்கு:

# பொதுமுகாமையாளர் காசாளர் சாட்சியம்!

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கொள்ளை வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம் எம் அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழககில் 77 செப்டம்பர் 12ம் தேதி அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க காசாளரிடம் 40,000ரூபா கொள்ளையடித்ததாக நா அருமைச்சந்திரன், க ரமணகரன், த உதயனன் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஈ தம்பிரத்தினம், சட்டத்தரணி கே பி எஸ் வரதராசா, சட்டத்தரணி கனக மனேகரன் சட்டத்தரணி எம் சிறிகாந்தா ஆகியோர் ஆஜரானர்கள்.

சிரேஷ்ட அரச சட்டத்தரணி டி ஈ குமாரசிங்கா, சட்டத்தரணி ஆர் ஐ கனகரத்தினம் ஆகியோர் அரசதரப்பில் ஆஜரானர். அச்சுவேலி ப நோ கூ ச பொதுமுகாமையாளர் பரமநாதன் குகநாதன், காசாளர் இராசதுரை ஆகியோர் சாட்சியமளித்தனர்

விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

# புனர்வாழ்வுச்சபைக்கு 'நவம்' பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"கடந்தவருட ஆகஸ்ட் கலவரத்தின்போது பாதிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் வந்து குவிந்த தமிழர்களுக்கு யாழ்ப்பாணத்தின் முக்கிய பிரமுகர்கள் ஒன்று கூடி உருவாக்கிய 'பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுச் சபை'யினர் ஆற்றிய சேவை பாராட்டத்தக்கது" என்று சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட தமிழர்புனர்வாழ்வுச்சபையின் உதவிகளைப் பெற்ற சில அகதிகள், சாவகச்சேரி எம் பி யைச் சந்தித்து தங்களின் நன்றியைத்தெரிவித்துக் கொண்டபோதே திரு. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

"திரு ஜே ஜி அரசரத்தினத்தைத் தலைவராகக் கொண்ட புனர்வாழ்வுச்சபை, 500க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கியுள்ளது. ஒட்டுசுட்டானில் 50 ஏக்கரில் ஏற்படுத்தப்பட்டகுடியேற்றத் திட்டத்திலும், நெடுங்கேணி 200 ஏக்கர் திட்டத்திலும், வவுனியாவின் பல பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களிலும் அகதிகளைக் குடியேற்றி, அவர்கள் வாழ்க்கையில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியைப்பாராட்டாமலிருக்க முடியாது அகதிகளும் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து உண்மை, நேர்மையுடன், உழைப்பின் மூலம் தங்களின் பகுதிகளை வளம்கொழிக்கச் செய்யவேண்டும்" என்று திரு வி என் நவரத்தினம் கேட்டுக்கொண்டார்.

# செம்மணி கொலைவழக்கு இன்று வவனியாவில் விசாரணை

[யாழ்ப்பாணம்]

செம்மணி துப்பாக்கிச்சூட்டு கொலை வழக்கு இன்று காலை, வவுனியா மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் அநுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதி திரு முனமாலே முன்னிலையில் விசாரணை செய்யப்படும்.

இவ்வழக்கில் 76-ம் ஆண்டு ஆகஸ்ட் 10ம் தேதி நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சென்று விட்டு திரும்பும் வழியில் செம்மணியில் வைத்து வங்கி ஊழியரான பொன்னம்பலம் பரராசா என்ற இளைஞரைசுட்டுக் கொலைசெய்ததாக, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலயத்தில் கடமையாற்றிய கான்ஸ்டபிள் ஸ்டான்லி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய இன்ஸ்பெக்டர் எஸ் தாமோதரம்பிள்ளை இறந்தவரின் தந்தை, சகோதரி ஆகியோர் சாட்சிகளாக அழைக்கப்பட்டுள்ளனர். [க]

## வரி விளம்பரம்

### தேவை

சித்திரத்தில் ஆர்வமுள்ள ஆண்கள் தேவை. 16 வயதுக் குட்பட்டவரும் மாநகரஎல்லைக்குள் வசிப்பவரும் விரும்பத்தக்தது. நேரில்வரவும். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 8490

அனுபவமுள்ள தச்சு தொழிலாளர்களும் வேலைபழகவிரும்புபவர்களும் உடனடியாக தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். மனேச்சர், வள்ளச்சாலை, முல்லைத்தீவு. 8489

யாழ்ப்பாணத்தில் பிரபலமான வியாபார நிறுவனம் ஒன்றுக்கு விற்பனையாளர், கணக்காளர், காசாளர். Stock Clerk பதவிக்குஆட்கள் தேவை. ஆங்கிலம் எழுத, வாசிக்கப் பேச தெரிந்திருப்பதுடன் G. C. E. A/L சித்தியெய்தி இருத்தல்வேண்டும். முன்னர் வேலைசெய்த அனுபவ நற்சான்றிதழ்களுடன் சொந்தக்கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8491, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8491

நீரச்சிங், பினிசிங், அவுட்டோர் (படப்பிடிப்பு) தெரிந்த வாலிபர் ஒருவர் தேவை, நேரடியாகத் தொடர்புகொள்ளவும். லீலா ஸ்ருடியோ 190 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 8498

பேக்கரி வேலையில் நல்ல அனுபவமுள்ள இருவர் உடன் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். 41A, சிவப்பிரகாசம் ரோட், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். 8499

### விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி-புத்தூர்வீதியில் தென்னை, மா, கிணற்றுடன் வீடுகட்டக் கூடிய 9 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. டாக்டர் நா. சின்னத்தம்பி, அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சி. 8486

### CLASSES

I. C. M. A. (A&B) Chart-ered Preliminery Rapid revision 1978 exam. Weekend classes. Jaffna Education centre. 22, Ramiah chettiar Lane, Hospital Road, Jaffna. 8501


# 'பொலிஸ் விடுதியைத் தாக்க
# சிலர் பஸ்ஸில் வருவதாக பொலிஸ் அதிபர் கூறினர்'
## ஐ. பி. தாமோதரம் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''பொலிஸ் விடுதியை தாக்குவதற்கு பஸ்ஸில் ஒரு கூட்டத்தினர் வருவதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும் உடனே பண்ணைக்கு செல்லுமாறும் பொலிஸ் அதிபர் திரு. சௌரத்தின என்னிடம் சொன்னர். நான் பண்ணைக்கு போய்ப்பார்த்தேன். அப்படி ஒன்றையும் காணவில்லை.''

சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் திரு. எஸ். தாமோதரம் பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

இன்ஸ்பெக்டர் திரு. எஸ். தாமோதரம்பிள்ளை மேலும் கூறியதாவது நான் பண்ணையில் ஒன்றையும் காணவில்லையென எஸ். பிக்குவந்துசொன்னேன்.

மாலையில் டி. ஐ. ஜி., பொலிஸ் அதிபர் ஆகியோர் அவ்விடத்தில் போய்ப்பார்த்தனர்.

அன்றிரவு நான் விடுதியில் இருந்த போது பொலிஸ் கான்ஸ்டபிள் காயமடைந்ததாக அறிந்தேன். ஒட்டுமடத்தில் வைத்து அவர்கள் மீது சுட்டதாக அறிந்தேன். இச்சம்பவம் பற்றி அவதானிக்க பணிக்கப்பட்டேன். ஆனல் இச்சம்பவம் நடந்த இடம் எஸ் பி யின் உத்தரவின் பேரில் பண்ணையென மாற்றப்பட்டது.

### மகனையும் அடித்தார்கள்

17-ம் தேதி நான் பொலிஸ் நிலையத்திற்கு சென்றேன். சின்னக்கடையில் வல்லாரை வாங்க என்மகனை அனுப்பினேன். அவனுக்கு 3 பொலிஸார் அடித்தார்கள். நான் எஸ் பிக்கும் டி. ஐ. ஜிக்கும் சொன்னேன். அவர்கள் பெரிதாக எடுக்கவில்லை.

இரவு பொலிஸ் அதிபர் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் குணசேகராவின் முன்னல் உதவி அமைச்சர் வெரப்பிட்டியா எந்நேரமும் பொலிஸ் நிலையத்துக்கு வரக்கூடும் என்றும் ஆதலால் பொலிஸாரை நம்பர்களை அணியும்படி பணிக்குமாறும் தெரிவித்தார். நான் பொலிஸாரிடம் சென்று பொலிஸ் அதிபரின் உத்தரவைச் சொன்னேன். இதன்பின்னர் ஒருஇடத்தில் சிலர் நம்பர் அணியாமல் நின்றனர். பொலிஸ் அதிபரின் உத்தரவின்படி நடக்குமாறு அவர்களிடம் கூறினேன். அவர்கள் நான் சொன்னதை கவனித்ததாகத்தெரியவில்லை. இரண்டாம் தடவை நான் அவ்விடத்திற்குச் சென்ற போது அங்கு காவலுக்கு நின்ற பொலிஸாரைக் காணவில்லை.

நான் ஒரு கான்ஸ்டபிளை அனுப்பி அவர்களை கூட்டிவரச்சொன்னேன். மறுநாள் அவர்களை நான் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து கண்டித்தேன். இதனல் அவர்கள் என்மீது கோபமடைந்திருந்தார்கள். அடுத்த நாள் பலர் நம்பர் இல்லாமல் பொலிஸ் நிலையத்தில் உலாவியதைக் கண்டேன். நான் கேட்ட போது நொண்டிச் சாட்டுச் சொன்னர்கள்.

### டி. ஐ. ஜியும் அக்கறை எடுக்கவில்லை

18-ம் தேதி எனது மகனை பொலிஸார் தாக்கியது பற்றி எஸ். பிக்குப்புகார் செய்தேன்; பொலிஸார் நம்பர் அணிய மறுத்தது பற்றியும் சொன்னேன். அவர் இந்த விஷயத்தை பெரிதாக எடுக்கவில்லை. 19-ம் தேதி டி. ஐ. ஜிக்கும் இவ்விஷயங்களைச் சொன்னேன். அவரும் அது பற்றி அக்கறை எடுக்கவில்லை. பொலிஸ் அதிபரை பின் சந்தித்து நிலைமைபற்றி பேசினேன். பொறுப்பான உத்தியோகத்தர்களுடன் தமிழ்ப் பொலிஸாரை வெளியில் கடமைக்கு அனுப்பினல் நிலைமையை கட்டுப்படுத்துவதில் கஷ்டம் இருக்காது என்றேன். பொலிஸ் அதிபர் நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்கலாம் ஏனெனில் அவர் பெரும்பாலான சம்பவங்களுக்குப் பொறுப்பாக இருந்தார். எல்லா தமிழ் பொலிஸாரையும் வெளியில் அனுப்பமுடியாது என்றும் எனது ஆலோசனை நடைமுறைக்குச் சரிவராதென்றும் பொலிஸ் அதிபர் கூறினர்.

13-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த காணிவல் சம்பவம்பற்றி தலைமைக் காரியாலய இஸ்ஸ்பெக்டர் கான்ஸ்டபிளை வரவழைத்து என் முன்னிலையில் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தார்.

14-ம் தேதி காலை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் இச்சம்பவம் தொடர்பாக என்னை விசாரணை நடத்துமாறு பணித்தார். நான் சாவகச்சேரி பொலிஸ்கான்ஸ்டபிளின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தேன்.

16-ம் தேதிகாலை சார்ஜன்ட் துரைசிங்கம் போன்பண்ணி லொறியைத் தாக்கி சேதப்படுத்தியுள்ளதாகவும் கூறினர். நான் உடனடியாக அவ்விடத்திற்குச் சென்றேன். லொறி உடைக்கப்பட்டிருந்தது. அப்பக்கத்தில் பார்த்தேன் எவரையும் காணவில்லை. பின் முனீஸ்வரன் வீதிப்பக்கமும் பார்த்தேன் அங்கும் எவரையும் காணவில்லை. நான் இ போ ச கண்டக்டர் யேசுதாசனை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்கு ஒழுங்கு செய்தேன்.

### புத்தூரில் காயமுற்றோர்

அங்கு புத்தூரில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான கான்ஸ்டபிள் பண்டாரவும் அனுமதிக்கப்பட்டிருந்தார். 3 இளைஞர்கள் பொலிஸார்நேசக் கிச் சுட்டதால் காயம் ஏற்பட்டதாகச் சொன்னர்கள்.

ஏ எஸ் பி சில்வாவிற்காக கடமையாற்றிய ஏ எஸ் பி நூர்தீன், என்னை புத்தூருக்குச்சென்று இச்சம்பவம்பற்றி விசாரணை நடத்துமாறு கூறினர். நான் உடனே புத்தூருக்குப்போனேன், விசாரணையை ஆரம்பித்தேன்.

16-ந்தேதி காலை பொலிஸ் நிலையத்திற்கு வந்தேன். புத்தூரில் விசாரணையைத்தொடர அங்கு செல்லப் புறப்பட்ட சமயம், பாதுகாப்பு உத்தியோகத்தர் புகார்செய்ய அங்கு வந்திருந்தார், முதல்நாள் இரவு பொலிஸார் பல கடைகளைத் தாக்கி சேதம் விளைவித்தது பற்றி புகார் செய்யவே அவர் அங்கு வந்திருந்தார். தான் புத்தூருக்கு செல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்ததால், இதுபற்றி தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டருக்குப் புகார் செய்யுமாறு கூறினேன்.

அப்போது ஏ. எஸ். பி. நூர்தீன், பதட்டத்துடன் வந்து உரத்த குரலில் நகரில் நடந்த சம்பவம்பற்றி சொன்னர். உடனே பொலிஸார் புறப்பட்டனர். காலை 9-30 மணிக்குச் சென்றனர்.

### நாகவிகாரை பற்றி

17-ம் தேதி காலை நான் பொலிஸ் நிலையத்தில் இருந்தேன். பொலிஸ் அதிபர், நடமாடும் வானொலி மூலம் நாகவிகாரை தாக்கப்படவிருப்பதாக தகவல் கிடைத்திருப்பதாகவும், எவரையும் கிட்டச் செல்ல அனுமதிக்கவேண்டாமென்றும் தொடர்புகொண்டதை அவதானித்தேன்.

### குணசேன புத்தகசாலை

16-ம் தேதி சிவன்பண்ணை வீதியில் பொலிஸார் சுட்டதாக, ஜீப் சாரதி என்னிடம் கூறினர். பொலிஸார்தான் குணசேன புத்தகசாலையை தாக்கிச் சேதப்படுத்தியதாக மற்றொருகான்ஸ்டபிள் என்னிடம் கூறினர். யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்குமாற்றப்பட்ட கான்ஸ்டபிள் ஒருவர் தான் 15ம் திகதி, இரவு விடுதியில் படுத்திருந்தபோது சாரம் அணிந்திருந்த சில பொலிசார் தன்னை வந்து எழுப்பிபார்த்துவிட்டு பின்பு படுக்கும்படி கூறிவிட்டு, வேறுசிலரை எழுப்பிக் கொண்டு சென்றதாகவும், அவர்கள் தலையில்துவாய்கட்டியிருந்தார்களென்றும் என்னிடம் கூறினர் மறுநாள் சில கடைக்காரர் வந்து,முதல்நாள் இரவு பொலிசார் வந்துதங்கள் கடைகளை சேதப்படுத்தியதாக புகார் செய்தனர்.

இணைப்பு அதிகாரி வந்து மாநாடு வைத்தபோது நான் காரியாலயத்திலிருந்தேன். மாநாட்டில் கலந்துகொண்ட எம் பிக்கள் திரும்பி வந்த போது, பொலிசார் கூச்சலிட்

(6-ம் பக்கம் பார்க்க)

## நமீபிய பிரச்னை

நியூயோர்க், பெப் 12. ஐந்து மேற்குநாட்டுத் தலைவர்கள் நமீபிய பிரச்னைகள் பற்றி ஆராய்ந்துவருகின்றனர். [உ]

புதுடில்லி, பெப் 12

''திருமதி இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் ஜனநாயகம் அழிந்துபோயிருந்தது. ஜனதா கட்சி ஆட்சி அமைத்தவுடன்தான் ஜனநாயகம் உயிர் பெற்று தழைக்கத் தொடங்கியுள்ளது'' என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் கூறினர்.

கர்நாடகாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே பிரதமர் இவ்வாறு சொன்னர். பிரதமர் மேலும் பேசுகையில், ''அவசரகால நிலையை திருமதி காந்தி பிரகடனம் செய்திருந்த காலத்தில் மக்கள் அடைந்த துயர் எல்லையற்றது. ஊழல் வளர்ந்து ஜனநாயகமே அந்நேரம் அற்றுப் போயிருந்தது.

மீண்டும் மக்களின் நன்மதிப்பை திருமதி காந்தி பெறுவது அசாத்தியம். மக்கள் அவரைப் புரிந்துகொண்டுவிட்டார்கள். சுயநலம் ஒன்றே அவரின் குறிக்கோள்'' என்ருர். [உ]

## அழைப்பிதழ்

### ஆ. க. ஆறுமுகம்தம்பி

16-2-78 வியாழக்கிழமையன்று 274, நாவலர் வீதியில் மு. ப. 11 மணிக்கு நடைபெறும் சிவபதமடைந்த என் கணவர், மருதானை புகையிரதநிலைய அத்தியட்சகர் ஆ. க. ஆறுமுகம்தம்பி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

8500 திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

ஆலடி காரைநகர் விஞசித்தம்பி கணபதிப்பிள்ளை பெண் பரமேஸ்வரி என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

மரணசாதன நியாயாதிக்கம் பி.ஒ/417

மரணமெய்தியவர்

விஞசித்தம்பி கணபதிப்பிள்ளை, ஆலடி காரைநகர். மனுதார்.

மற்றும்

1. கணபதிப்பிள்ளை மகன் கணேசமூர்த்தி,
2. கணபதிப்பிள்ளை மகன் விக்ரமச்சந்திரன்,
3. கணபதிப்பிள்ளை மகன் லோகேஸ்வரன்,
4. கணபதிப்பிள்ளை மகள் நகுலேஸ்வரி,
5. கணபதிப்பிள்ளை மகள் பரமேஸ்வரி லிங்கம், -பராயமற்ருேர்.
6. செல்லத்துரை சண்முகராஜா-எல்லாரும் ஆலடி காரைநகர்.

பிரதிவாதிகள்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு பங்குனி மாதம் 8-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுதனதாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1978-ம் ஆண்டு தை மாதம் 31-ந் திகதி

மன்றின் ஆணைப்படி

[ஒப்பம்]

பொ. பாக்கியநாதன்

பதிவாளர்.

8481

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

ஆயிலி, காரைநகரைச் சேர்ந்த கந்தையா சிவசம்பு என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரண சாதன நியாயாதிக்கம்) பி ஒ 423.

கந்தையா சிவசம்பு கைம்பெண் இந்திராணி, இல. 2, அம்மன் ரோட்டு, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மற்றும்

பராயமற்றவர்கள்;

1. சிவசம்பு மகள் நிர்மலா,
2. சிவசம்பு மகன் பிரபாகரன்,
3. சிவசம்பு மகள் ஜானகி. எல்லாரும் இல. 2, அம்மன் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
4. கந்தையா சதாசிவம், ஆர். எம். பி. தன்கோடை, காரைநகர்.

எதிர்வாதிகள்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு சித்திரை மாதம் 12ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுதனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்துகின்றனர்

1978ம் ஆண்டு தை மாதம் 31ம் திகதி.

மன்றின் ஆணைப்படி,

[ஒப்பம்]

பொ. பாக்கியநாதன்

பதிவாளர்!

வரைதல்!

[ஒப்பம்]

செ. மகேசன்

மனுதாரின் சட்டத்தரணி.

8480

ஈழநாடு
The Eelanaadu

## வீதி விபத்துக்கள்

தினமும் வீதி விபத்துக்களுக்கு ஐந்துபேர் பலியாகிறார்கள். இந்த உயிர்ப் பலி நமது நாட்டில்தான் நிகழ்கின்றது.

பொலிஸ் தலைமைக்காரியாலயத்திலிருந்துதான் இத்தகவல் வெளியாகியிருக்கிறது.

தலைநகரான கொழும்பில் வீதி விபத்துக்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்களும், வாடகைக்கார்களுமே பெரிதும் காரணமாம்,

காலையில் வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டுச் செல்லும் குடும்பத்தலைவனோ, பாடசாலைக்குச் செல்லும் பிள்ளையோ மாலையில் சுகமே வீட்டுக்குத் திரும்பிவருவது இந்நாளில் சந்தேகத்துக்கிடமாயுள்ளது.

ஏழு சிறி இலக்கம் சமீபத்தில்தான் கொடுக்கப்பட்டது. இதுவரை ஐயாயிரம் மோட்டார் கார்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்படாமல் வெளிநாடுகளிலிருந்து வந்த இலக்கத் தகடுகளுடன் வீதிகளில் திரியும் புதிய மோட்டார் கார்களின் எண்ணிக்கை எத்தனையென்று கணக்கிடமுடியாது.

நமதுநாட்டில் தொழிற்சாலைகள் குறைவு; தொழில்கள் வளரவில்லையென்று பலரும் கவலைப்படுகின்றனர்.

ஆனால் வீதிக்கு இரண்டு மூன்று என்று மோட்டார் காராஜ்கள் தினமும் வளர்ந்துகொண்டே வருகின்றன.

வாகனங்களின் தொகை அதிகரித்து வருவதாலும் வீதிகள் பழையபடியே இருந்து வருவதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன; வீதிகளின் சீர்கேட்டினால் வாகனங்களுக்கும் சேதமேற்படுகின்றது. இதன்காரணமாக வாகனங்களைப் பழுதுபார்க்கும் கராஜ்கள் அதிகரித்து வருவது வியப்பல்ல

வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருவதும் தினமும் ஐந்துபேர் இவ்விபத்துக்களில் பலியாவதும் வேதனையான விஷயம்.

விபத்துக்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வீதிகளிலேயே பிணங்கள் குவிந்து கிடக்க வேண்டிய நிலைஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்போதே வீதிகளுக்கு அதிகமாக வாகனங்களின் தொகை அதிகரித்துள்ளது.

தலைநகராகிய கொழும்பில் ஒருவர் ஓர் இடத்துக்கு வாகனத்தில் செல்வதைவிட நடந்து சென்றால் விரைவில் அந்தஇடத்தைச் சென்றடையலாம். ஆனால் அவர் விபத்தில்லாமல் போய்ச் சேருவாரா என்பது தான் கேள்வி.

இப்போதே இந்தநிலை என்றால் இன்னும் சில மாதங்களில் இ. போ. சபை இறக்குமதி செய்யவிருக்கும் ஆயிரம் பஸ்களும் வந்து சேர்ந்தால் எப்படி இருக்கும்? இது தவிர சுதந்திரவர்த்தகவலயத்தில் தொழில்களை ஆரம்பிக்கவிருக்கும் வெளிநாட்டவர் வாகனங்களைக் கொண்டுவராமலா இருப்பார்கள்.

வாகனங்கள் இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது வீதிகள் புதிதாக அமைக்கப்படவேண்டும்.

மேல்நாடுகளில் இருப்பது போல் மேம்பாலங்கள், பாதாளப் பாதைகள் அமைத்தால்தான் வீதி விபத்துக்களைச் சமாளிக்க முடியுமென்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

கொழும்பில் வீதிகளில் வாகனங்களின் நெருக்கடி ஒருபுறமிருக்க நடைபாதை வியாபாரிகளின் தொல்லை பெரிது.

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது மிக அவசியமாகிவிட்டது. இதில் இனியும் அசமந்தமாக இருக்கமுடியாது.

---

சன்சோனி கமிஷன் விசாரணை

# 'பொலிசார் பஸ்ஸை கடத்திச்சென்று நகைக்கடையைகொள்ளையடித்தனர்'

## இ.போ.ச. அத்தியட்சகர்தியாகராசாசாட்சியம்

—கா. யோகநாதன் —

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் 16-ம் தேதி பொலிசார் தாக்குதலை ஆரம்பித்ததும் பஸ்கள் எல்லாம் கோண்டாவில் டிப்போவிற்குச் சென்றுவிட்டன. யாழ், பஸ் நிலையம் வெறிச்சோடிக்கிடந்தது. பாடசாலைக்கு சென்ற மாணவர்கள் வீடுதிரும்பவழியில்லை! நான்பாடசாலைகளுக்கு சென்று, பஸ்கள் வரும்வரை மாணவர்களை வெளியில்விடவேண்டாம் என அறிவித்தேன். பயத்தினால் பஸ் ஊழியர்கள் பஸ் ஓட மறுத்துவிட்டனர். மாணவர்களை வீடுகளுக்கு அனுப்பவேண்டிய அவசியத்தைக் கூறியபின் சம்மதித்தார்கள் பின் பஸ்களை பாடசாலைகளுக்கு அனுப்பி மாணவர்களை வீடுசேரவழிசெய்தேன்."**

**யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளித்த யாழ்ப்பாணம் இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் திரு. நாகலிங்கம் தியாகராசா மேற்கண்டவாறு கூறினார்.**

திரு. தியாகராசா ஆங்கிலத்தில் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: நான் 58-ம் ஆண்டு இ. போ. ச. வில் சேர்ந்தேன் மட்டக்களப்பு, கொழும்பு, கிளிநொச்சி யாழ்ப்பாணம் டிப்போக்களில் கடமையாற்றியிருக்கிறேன்.

### யாழ்.நகரில் குழப்பம்

77-ம் ஆண்டு ஆகஸ்ட் 16-ம் தேதி நான் கோண்டாவில் டிப்போவிலிருந்து காரில் வந்துகொண்டிருந்தேன். அப்போது பஸ்களெல்லாம்கோண்டாவில் டிப்போவை நோக்கி சென்று கொண்டிருந்தன. நான் ஒரு பஸ்ஸை மறித்து விசாரித்தேன். யாழ்ப்பாணத்தில் குழப்பம் நடப்பதாவும், பொலிசாரினால் மக்கள் தாக்கப்படுவதாகவும், அதனால் பஸ்களை டிப்போவிற்கு கொண்டு போவதாகவும் கூறினர். நான் உடனே பஸ் நிலையத்திற்கு சென்றேன். பலாலி வீதியால் பஸ் நிலையம் சென்றேன். ஆஸ்பத்திரி வீதியால் மக்கள் ஓடிச் செல்வதைப்பார்த்தேன். பொலிசார் பஸ் நிலையத்தில் நின்றார்கள். பஸ் நிலையம் வெறிச்சோடிக்கிடந்தது. பிரயாணிகள் எவரும் இல்லை. பஸ்களும் இல்லை.

### 'சைக்கிள்களுக்கு மேலால் பஸ்ஸை ஓட்டுமாறு பொலிசார் கூறினர்'

நான் பஸ் நிலையக்கந்தோரில் போய் நடந்ததென்னவென்று விசாரித்தேன் பொலிசார் மக்களையும், வாகனங்களையும் தாக்கினார்கள் என்று கூறினார்கள். நான் உடனே கோண்டாவில் டிப்போவிற்கு போன் பண்ணி அங்குள்ள நிலைமை பற்றிக் கேட்டேன். 70 சதவீதமான பஸ்கள் டிப்போவிற்கு வந்துவிட்டதாகச் சொன்னார்கள், சாரதிகள், கண்டக்டர்கள் எவரையும் வீடுசெல்லவிடவேண்டாமென்றும், மாணவர்களை வீடுசேர்க்க வழிசெய்யவேண்டுமென்றும் கூறினேன்.

### அதிபர்களைச் சந்தித்தேன்

அதன்பின் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களை வெளியில் விடவேண்டாம். அவர்கள் வீடுசெல்ல பஸ் ஏற்பாடுசெய்வதாக கூறினேன். நேராக டிப்போவிற்குவந்தேன். பஸ் ஊழியர்கள் வேலைசெய்ய மறுத்துவிட்டனர். பொலிஸார் தாக்குவதாகக் கூறினார்கள். மாணவர்கள் வீடுசெல்ல வேண்டியவிஷயத்தை கூறினேன். அவர்கள் பின் சம்மதித்தனர். 20 பஸ்களை பாடசாலைகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தேன். மாணவர்களை வீட்டில்சேர்த்துவிட்டுமீண்டும் டிப்போவிற்கு வந்தனர்.

நான் பொலிஸ் அதிபருடன் தொடர்புகொள்ள முயற்சித்தேன். பதில் இல்லை. பின் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளமுயற்சித்தேன். அதுவும் முடியவில்லை சம்பவம் பற்றி 'லொக் என்றி' யில் எழுதினேன்.

### 10 பஸ்களை அனுப்பினேன்

மாலை 3-30 மணிக்கு அரசாங்க அதிபரும், உதவி அரசாங்க அதிபரும், ஆஸ்பத்திரியில் பயத்தினால் தஞ்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களை வீடுசேர்க்க உதவும்படி கேட்டார்கள். நான் ஊழியர்களுடன் கதைத்து 10 பஸ்களை ஏற்பாடு செய்தேன். பஸ்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு நான் பின்னால் காரில் சென்றேன்.

விக்டோறியா றோட்டு சந்தியில் மக்கள் பஸ்ஸை மறித்து பொலிஸ் தாக்குவதாகக்கூறினார்கள். பொலிஸார் சாரதியைத் தாக்கி சயிக்கில்களுக்கு மேலாக பஸ்ஸை ஓட்டும்படி கூறினார்கள். மற்றொரு சாரதியும் அப்படிக் கூறினார். பஸ்கள் பின் டிப்போவிற்குக் கொண்டுசெல்லப்பட்டது.

### யாழ்.வளாக சிங்களமாணவர் பற்றி பொலிஸ் அதிபர் விடுத்த எச்சரிக்கை

### அனுராதபுர அகதிகள்

17-ம் தேதி காலை, யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ரயிலில் அனுராதபுரத்திலிருந்து அகதிகள் வருவதால், அவர்களை வீடு சேர்க்க பஸ்களை ஏற்பாடுசெய்தார். 10 பஸ்களை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு அனுப்பஏற்பாடு செய்தேன். ரயில் நிலையத்திற்குச் சென்றபோது அங்கு பெரும் சனக்கூட்டம் நின்றது காயமடைந்தவர்கள் அந்த ரயிலில் வருவதாகத் தகவல் கிடைத்தது. இதனால்மக்களிடம்பதட்டநிலை இருந்தது. நான் யாழ்ப்பாணம் எம் பியுடன் கதைத்தேன். பிரயாணிகளை நாவற்குழி ரயில் நிலையத்தில் இறங்க ஏற்பாடு செய்யுமாறு கூறினேன். அதன்படி நாவற்குழி புகையிரத நிலைய அதிபருடன் தொடர்புகொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது. தாங்கள் நாவற்குழி சென்றதும் ரயில் வந்துவிட்டது. பிரயாணிகள் இறங்கிவிட்டனர். அவர்களை பஸ்களில் பல்வேறு பாதைகளால் வீடுகளுக்கு அனுப்பினேன். அதன் பின் நான் டிப்போவிற்குச் சென்றேன்.

### யாழ்ப்பாண மாநாடு

யாழ்ப்பாணத்தில் நடந்த மாநாடு ஒன்றுக்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். நான் மாநாட்டிற்குச் சென்றேன். டி. ஐ. ஜி. அனே செனவரத்தினவும் இருந்தார் பொலிசார் தாக்குவதால் பஸ் ஊழியர் பஸ் ஓட மறுப்பதாக நான் மாநாட்டில் தெரிவித்தேன். நிலைமை மீண்டும் அமைதிக்குத் திரும்பும்வரை பஸ் ஊழியர்கள் கடமையாற்றமாட்டார்களாம் என்றும் சொன்னேன்.

அப்போது டி ஐ ஜி அனே செனிவரத்தின வளாக சிங்கள மாணவர்களை அனுப்புவதற்கு வழி செய்யவேண்டுமெனக் கூறினர். பொலிசார் தாக்கியதால் பஸ் ஊழியர்கள் பயப்படுவதாகவும், அவர்கள் செல்லமாட்டார்கள் என்றும் கூறினேன். தெற்கிலிருந்து கோவில் உற்சவத்திற்கு விசேடமாக 10 பஸ்கள் வந்திருப்பதாகவும் அந்த பஸ்ஸில் வளாக சிங்கள மாணவர்களை அனுப்ப ஏற்பாடு செய்யலாம் என்றும் ஆலோசனை கூறினேன். நான் அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குச் சென்று பருத்தித்துறை டிப்போவுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அப்போது டி ஐ ஜி அங்கு வந்து வளாகத்தில் உள்ள சிங்கள மாணவர்கள் தாக்கப்பட்டால் தெற்கிலுள்ள அத்தனை தமிழர்களும் கொல்லப்படுவார்கள் என அச்சம் தெரிவித்தார்.

### இராணுவச் சாரதிகள்

பஸ்களை இராணுவ சாரதிகளைக்கொண்டு செலுத்தலாம் என்றும் அவர் கூறினார். நான் எனது மேலதிகாரிகளின் உத்தரவுப்படியே கடமையாற்ற முடியுமென்றும் இ போ ச தலைவருடன் இது பற்றி தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் அவரிடம் கூறினேன்.

மாநாட்டில் சுகாதார அத்தியட்சகர், சுங்கப்பகுதி அதிபர், டி ஐ ஜிக்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் சட்டத்தை மீறிய நடத்தை பற்றி புகார் செய்தனர்.

### டி. ஐ. ஜி. போன் செய்தார்

டி ஐ ஜி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஏ எஸ் பி நார்டீனு அல்லது வேறு யாராவது பதிலளித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் கூட்டத்தை கொஞ்ச நேரம் நிறுத்துமாறு கூறினார். சிங்கள மாணவர்களை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கூறினார்.

### ஆரியகுளத்தில் பஸ் கடத்தல்

நான் டிப்போவிற்குச் சென்று நடந்தவை பற்றி 'லொக்' என்றி எழுதினேன். பஸ் ஊழியர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். குறிகாட்டுவானிலிருந்து டிப்போ நோக்கி வந்த 22 சிறி 2227 இலக்க பஸ்ஸை நாகவிகாரைச் சந்தியில் பொலிசார் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று கன்னாதிட்டியில் நகைக்கடை ஒன்றை உடைத்து நகைகளை கொள்ளையடித்ததாகக் கூறினார்கள்

### தொடர்புகொள்ள முடியவில்லை

நான் யாழ்ப்பாணம் பொலிசுக்கு உடனே போன் செய்

[5-ம் பக்கம் பார்க்க]

---

மனவாக்கு

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது பிறர் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்வோமாயினும் நம்முடைய மனம் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்ள மாட்டோமே.

— ஆ --முகநாவலர்

ம. கி. விவகாரம்:

# ருமேனிய அதிபரை சந்திப்பார் சதாத்

கெய்ரோ, பெப் 12

மத்தியகிழக்கு விவகாரம் தொடர்பான தமது சமாதான நடவடிக்கைகள்பற்றி ருமேனிய ஜனாதிபதியிடம் எடுத்துரைப்பதற்காக எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் ருமேனியா சென்றுள்ளார்.

இதேவேளை கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் இஸ்ரேலியக் குடியேற்றம்பற்றி அன்வர் சதாத் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இக்குடியேற்றத்தை அமெரிக்கா கண்டித்துள்ளதை எகிப்திய வெளிநாட்டமைச்சர் ஜனுப் கமால் வரவேற்றுள்ளார். எகிப்திய ஜனாதிபதி ம. கி. விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை வாஷிங்டன் சென்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டருடனும் நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## விமான விபத்தில் 32 பேர் பலி

லண்டன், பெப் 12

கனடிய 'போயிங்' 737 விமானம் ஒன்று பிரிட்டிஷ் கொலம்பியாவில் விழுந்து நொறுங்கியது.

இவ்விமானத்தில் இருந்த 32 பேரும் பலியாகினர். விமான விபத்துக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. [உ]

# புதிய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள்

## பிரதமர் உறுதி

[கொழும்பு]

விரைவில் உருவாக்கப்பட இருக்கும் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படும். அடிப்படை உரிமைகள் மீளப்படும் பட்சத்தில் நீதிமன்றம்மூலம் நிவாரணம் பெறவும் அந்த அரசியல் அமைப்புத் திட்டத்தில் வாய்ப்பளிக்கப்படும்.

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கண்டியில் நடைபெற்ற வைபவத்தில் கூறினர்.

திரு. பிரேமதாசா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'இந்த நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் பூரணத்துவ முறையில் அடைய வேண்டும் என்பதே ஐ. தே. க. அரசின் குறிக்கோள்.

'பொருளாதார அபிவிருத்தியையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள நாம் எமது குறிக்கோளை அடைய முடியாவிடினும் அதற்கான அத்திபாரத்தையாவது இடுவோம்.

'புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் பௌத்த மதத்திற்கு உரிய இடம் அளிக்கப்படுவதுடன் மற்றைய மதங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும்.

'இன, மத, சாதி அடைப்படையில் எவராவது பாரபட்சம் காட்ட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## சோமாலியாவில் அவசர காலநிலைப் பிரகடனம்

லண்டன், பெப், 12

சோமாலியாவில் நேற்று அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

மாஜி இராணுவத்தினரும் அணிதிரட்டப்படுகிறார்கள்.

எதியோப்பியாவுக்கும் சோமாலியாவுக்கும் இடையே குமுறல் நிலை இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. [உ]

## 'ஆட்சிப்பொறுப்பேற்று ஆற்றிய பணி என்ன?'

### ஜனதாவை சாடுகிறார் இந்திரா

புதுடில்லி, பெப், 12

''ஜனதா கட்சி மக்களை ஏமாற்ற முயல்கிறது. ஆட்சிப் பொறுப்பை ஏற்று இக்கட்சி ஆக்கபூர்வமாகச் செய்தது எதுவுமேயில்லை'' என்று பாரத முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினார்.

அஸாமில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் மேலும் பேசுகையில் ''நாட்டு முன்னேற்றம், மக்கள் நலன் என்றெல்லாம் பொய் வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த ஜனதா கட்சியினர் சட்டசபைத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்படுவது நிச்சயம்.

'நாட்டு முன்னேற்றம் கருதி இவர்கள் உண்மையாக உழைப்பவர்களாக இருந்தால் இவர்களிடம் உருப்படியான திட்டம் எதுவும் இருந்திருக்க வேண்டும். ஆனால் இவர்களிடம்தான் அத்தகைய திட்டம் எதுவும் இல்லையே. பின் எப்படி மக்கள் நலன்பேண முடியும்'' என்றார். [உ]

## சிட்னியில் பொதுநல நாடுகள் மாநாடு

சிட்னி, பெப் 12

அவுஸ்திரேலியத் தலைநகரான சிட்னியில் நடைபெறும் பொதுநல நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு மலேஷிய, சிங்கப்பூர் பிரதம மந்திரிகளும் சிட்னி வந்துள்ளனர்.

இம்மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் கலந்துகொள்கிறார்.

திரு. ஜெயவர்த்தன தமது பாரியாருடன் வந்துள்ளார்.

இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சிட்னிக்குப் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாயியுடன் வந்துள்ளார். [உ]

## கிங்ஸ்ஹவுஸ்போய் திரும்புகையில்

# திட்டமிட்டதுபோல் பொலிசார் கூச்சல் போட்டார்கள்'

## சன்சோனி கமிஷன்முன் 'யோகேஸ்'

[கா. யோகநாதன்]

[யாழ்ப்பாணம்]

யாழ். கிங்ஸ் ஹவுஸில் நடந்த மாநாட்டிற்குச் சென்றேன். பொலிஸ் நிலையத்திற்குச் சமீபத்தில் சென்றதும் பொலிஸார் கூச்சலிட்டுக் கொண்டுவந்தனர். இச்சம்பவத்தை மாநாட்டில் இணைப்பு அதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தேன்.'

சன்சோனி கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் மேற்கண்டவாறுகூறினர்.

யாழ்ப்பாணம் எம்.பி. சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

எஸ்.பியுடன் தொடர்பு கொள்ள முயன்றேன். முடியவில்லை பின் டி. ஐ. ஜி. அனே செனிவரத்னவுக்கு கொழும்புக்கு போன் பண்ணினேன். அவர் வீட்டில் இல்லை.

### ஜி.ஏ.க்கு தகவல்

காலை 5-15 மணிக்கு நான் யாழ். அரசாங்க அதிபருக்கு போன் பண்ணி 50 பேர் வீட்டிற்கு வந்திருப்பதாகவும், பொலிஸார் தாக்குதல் பற்றியும் கூறினேன். நிலைமை மோசமாகிக்கொண்டிருப்பதாகவும், உடனே கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டுமென்றும் கூறினேன். தான் முழங்காவிலுக்கு செல்வதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தபின் தொடர்பு கொள்வதாகவும் கூறினார்.

நான் பழைய மார்க்கட்டிற்கு செல்லவிருப்பதாகவும் அதனால் வீட்டில் இருக்கமாட்டேன் என்றும் அறிவித்தேன். காலை 5-30 மணியளவில் அரசாங்க அதிபர் போன்பண்ணி எனது மனைவியிடம் கதைத்தார். தான் எஸ். பி. க்குப் போன் பண்ணியதாகவும், அவருடன் தொடர்பு கொள்ள முடியாமற்போய்விட்டதாகவும் நிலைமைபற்றி ஏ. எஸ். பி. க்கு அறிவித்துள்ளதாகவும் கூறினார்.

### அமிருக்கு அறிவித்தேன்

காலை 5-30 மணிக்கு நான் திரு. அமிர்தலிங்கத்திற்குப் போன்பண்ணி யாழ். நகர் நிலைமை பற்றி அறிவித்தேன். தான் உடனடியாக பிரதம மந்திரியுடன் தொடர்புகொண்டு நிலைமையை அறிவிப்பதாகவும் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகவும் கூறினார்.

கமிஷனர்: அவர் கொழும்பில் இருந்தாரா?

யோகேஸ்: இல்லை, 10 மைல்களுக்கு அப்பால் உள்ள வட்டுக்கோட்டையில் அவரது வீட்டிலிருந்தார்.

நான் பழைய மார்க்கட்டிற்குச் சென்றேன். பழைய மார்க்கெட் எரிந்துகொண்டிருந்தது. கடைகளின் பெயர்ப்பலகைகள் அடித்து நொறுக்கப்பட்டிருந்தன. தமிழ் அறிஞர்களின் சிலைகள் உடைக்கப்பட்டிருந்தன. கோப்பாய் எம். பியைக் கூட்டிவர எனது காரை அனுப்பினேன். நாம் இருவரும் முனியப்பர் வீதிக்குச் சென்று கார்கள் சேதமடைந்ததைப் பார்த்தோம்.

பழைய மார்க்கட்டில் உள்ள ஒருவர் தான் பொலிஸ் காரைப் பார்த்ததாகவும் அதன் நம்பர் 23 ஸ்ரீ 3977 என்று கூறி அதனை குறித்துத் தந்தார். தானும் எம் பியும் திரும்பி வரும்போது மக்கள் கூட்டமாய் நின்றார்கள். நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்களுக்கு உறுதியளித்தேன். கலைந்துசெல்லுமாறும் கூறினேன்.

காலை 8 மணிக்கு 2 பொலிஸ்காரர்கள் கூட்டத்தினால் துரத்தப்பட்டதாகவும் ஏ. எஸ். பி. நார்டீன் ஜீப் சேதப்பட்டதாவும் கேள்விப்பட்டேன்.

### பொலிசார் துரத்தியது

நான் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தபோது பொலிசார் மக்களைத் துரத்துவதைக் கண்டேன். நான் வீட்டிற்குப் போனதும் பாதுகாப்பு தேடியும், பொலிசாரால் தாக்கப்பட்டும் பயத்தினாலும் சுமார் 200 பேர் கூடியிருந்தனர். என்னிடம் நடந்தவை பற்றி புகார் செய்யவும் வந்திருந்தனர்.

வளவிற்கு வெளியில் நிற்க வேண்டாமென்றும் வளவிற்குள் நிற்குமாறும் அவர்களிடம் கூறினேன். காலை 8 45 மணிக்கு கோப்பாய் எம் பி. பிரதமருடன் தொடர்பு கொள்ள முயன்றுகொண்டிருந்தார். தொடர்பு கொள்ள முடியவில்லை 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் சடலங்கள் ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும் என்னிடம் வந்து சொன்னார்கள். நவின மார்க்கட்டிற்கும் நெருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்கள்.

### பொலிசார் வந்தனர்

காலை 9 மணிக்கு நான் சுந்தோரில் இருக்கும்போது ஆயுதம் தாங்கிய 15 அல்லது 20 பொலிசார் வந்தார்கள். வளவிற்குள் நின்றவர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. நான் அவர்களிடம் வந்து வீட்டிற்குள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன். என்னைத் திட்டி தகாத வார்த்தைகளால் பேசினார்கள். வீட்டிற்கு வெளியில் செல்லுமாறு கூறினேன். அவர்களில் அலோசியஸ் என்பவரை மட்டும் தெரியும். இவர்களை வெளியில் கூட்டிச் செல்லுமாறு அலோசியஸிடம் கூறினேன். அவர்களைப் போகும்படி அலோசியஸ் கூறினார்.

காலை 9-45 மணிக்கு திரு எஸ் தம்பித்துரை, திரு தப்பு கந்தையா ஆகியோருடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். 2 சடலங்கள் கொண்டுவரப்பட்டதாக வைத்திய அத்தியட்சகர் கூறினார் மற்றொரு வயது போனவரின் சடலத்தையும் ஆஸ்பத்திரி சவச்சாலைக்குக் கொண்டுவரச்செய்தேன்.

காலை 11 மணிக்கு திரு அமிர்தலிங்கம் வந்தார்

6-ம் பக்கம் பார்க்க


# அம்புஷ் 25

வெங்காயம்-மிளகாய்

பயிர்களை தாக்கும் புளுக்களை

கட்டுப்படுத்த வல்ல

சக்திவாய்ந்த கிருமிநாசினியாகும்.

4000 கன்றுகளுக்கு போதுமான

2 அவுன்ஸ் (50ML) அம்புஷ்

கிருமிநாசினியின் விலை:
ரூபா 35-40 சதம் மட்டுமே:

மேலதிக விபரங்கட்கு:

த ரோரு லிமிடெட்,

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்,

தொலைபேசி இல: 7651



சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30,6-30, 9-45
ஜெமினியின்
மோட்டார் சுந்தரம்பிள்ளை
இருவர்களுக்கான ஆங்கிலப்படம்:
18-2-78, 19-2-78 சனி, ஞாயிறு காலை 8-30மணிக்குமட்டும்
"Kingdom in the Clouds"

Regal (Jaffna) 2 nd Crowded week
Daily 4-45, 7-00 & 9-30 p. m.
Hayley Mills Hywel Bennett
in
TWISTED NERVE
(color)

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—விஜயலக்ஷ்மி நடித்த
வல்லவன் ஒருவன்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
ஃ கமலஹாசன் ஃ ரஜனிகாந்த்
ஃ எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

50-வது நாளை நோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிருன்
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.
குறிப்பு: கடைசி இரு வாரங்கள் மட்டும்

2-வது வெற்றி மாதம்
ராணி வி. பி. கணேஷன் — சுபாஷிணி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தினசரி: 10-30, 2-30-6-30, 9-30
ராஜா ஜெய்சங்கர் கே.ஆர்.விஜயா சோ
(யாழ்ப்பாணம்) விஜயகுமார் மனோகர்
நடித்த
அசோகா பிரதர்ஸ்
அளிக்கும்
அபிராமி மூவீஸ்




திரைக்கதை வசனம் டைரக்ஷன்:
மதுரை திருமாறன்
இசை:
எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடல்கள்:
கண்ணதாசன்-வாலி
ஒளிப்பதிவு: ராமச்சந்திரன்

# பொலிசார் பஸ்ஸை—

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தேன். பதிலில்லை. அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ள முயன்றேன். முடியவில்லை. டி ஐ ஜி செனவரத்தினவுடன் தொடர்பு கொள்ள முயன்றேன் முடியவில்லை.

## அது ஒரு வதந்தி என்ருர்

ஏ எஸ் பியுடன் தொடர்பு கொண்டு சம்பவம் பற்றி கூறி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கூறினேன். இது ஒரு வதந்தியென்றும் பஸ்ஸை கடத்தவேண்டிய அவசியம் பொலிசாருக்கு இல்லை என்றும் அவர் கூறினுர். இதுபற்றி லொக்புக்கில் எழுதினேன். பிற்பகல் 2-30 மணிக்கு கடத்தப்பட்ட 22 ஸ்ரீ 2227 இலக்க பஸ் டிப்போ வந்தடைத்தது.

பஸ் சாரதியும், கண்டக்டரும் வந்தார்கள். அவர்களிடம் நடந்தவற்றை கேட்டேன். ஆயுதமுனையில் பொலிசார் பஸ்ஸை கடத்தி கன்னுதிட்டிக்கு கொண்டுசென்று நகைக்கடை ஒன்றை கொள்ளையடித்ததாக கூறினுர்கள். அவர்களது வாக்குமூலத்தை பதிவுசெய்தேன்.

17-ம் திகதி மாலை கலாச்சார அமைச்சர் திரு. குருலேயும், உதவிஅமைச்சர் திரு. வீரபிட்டியாவும் என்னை தேடிச்சென்ருர்கள். நான் கச்சேரிக்கு சாரதியையும் கண்டக்டரையும் கூட்டிச்சென்றேன். அமைச்சர் குருலே, அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் முன்னிலையில் அவர்கள் பஸ்கடத்தல் பற்றி கூறினுர்.

## பொலிசார் தாக்கினர்

18-ம் திகதி காலை நான் டிப்போவிலிருக்கும்போது, ஊழியர் பாலசுப்பிரமணியம் வந்து ஆரியகுளம் சந்தியில் தன்னை பொலிசார் தாக்கியதாக கூறினர். சாரதி கந்தையாவும் வந்து பொலிஸார் தாக்கியதாக புகார் செய்தார். நான் கச்சேரிக்கு கூட்டிச்சென்று ஏ. எஸ். பி. முன்னிலையில் அவர்கள் வாக்குமூலங்களை பதிவுசெய்து, அவர்களை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன்.

சட்டத்தரணி ஏன் கச்சேரிக்கு கூட்டிச் சென்றீர்?- மக்கள் பயத்தினுல் பொலிஸ் நிலையம் செல்லாததினுல். கச்சேரியில், மக்களின் புகார்களைப் பதிவுசெய்ய தற்காலிகமாக இணைப்பு அதிகாரி, ஒரு பொலிஸ் டிப்போவை ஏற்பாடுசெய்திருந்தார்.

சட்டத்தரணியின் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் பொலிசாரும் இராணுவமும் சிலைகளை உடைத்துள்ளதாக, பஸ்நிலைய, பாதுகாப்பு உத்தியோகத்தர் எனக்கு டெலிபோன் மூலம் உடனே அறிவித்தார்கள். சிலைகள் என் பொறுப்பின் கீழ் இல்லாததினுல் நான் உடனடியாக இது பற்றி யாழ்ப்பாணம் எம். பிக்கும் கோப்பாய் எம். பிக்கும் அறிவித்தேன்.

## பொலிசார் சுட்டனர்

அந்தர்மடத்தைச் சேர்ந்த ந. வரதராசா (வயது 19) சாட்சியமளிக்கையில் கூறியதாவது; 76ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி காலை 8-30 மணிக்கு நான் வேலைக்கு சென்றுகொண்டிருந்தேன். வெலிங்டன் தியேட்டர் சந்திக்குப் போனேன், அங்கு

# 'இன்ஸ்பெக்டர் தடுத்தும் பொலிசார் சுட்டனர்'

ஒரு கூட்டத்தைக் கண்டேன். என்ன விஷயம் என விசாரித்தேன். பொலிசார் துரத்தி அடிப்பதாகச் சொன்னுர்கள். ஒரு ஜீப் மணிக்கூட்டு வீதியால் வெலிங்டன் சந்திக்கு வந்தது. இரண்டு மூன்று தடவை சுட்டார்கள். நான் முனீஸ்வரன் கடைக்குப் பின்னுல் உள்ள கருச்சில் ஒளித்து நின்றேன். பொலிசார் வந்து கருச்சை திறந்து அங்குநின்ற கார்களை உடைத்து சேதப் படுத்தினுர்கள். இந்த கருச்சில் வேறு ஆட்களும் ஒழித்து நின்ருர்கள். அவர்களையும் பொலிசார் அடித்தார்கள். அதன்பின் பொலிஸார்வெளிக் கிட்டுப் போனுர்கள். நாங்கள் பின்பக்க வேலியால் பாய்ந்து மணிக்கூட்டு வீதிக்கு வந்தோம்.

வெலிங்டன் சந்தியில் இளைஞர்கள் ஓடிவந்துகொண்டிருந்தார்கள். பொலிஸார் துரத்துகிருர்கள். அதனுல் ஓடிவருவதாகச் சொன்னுர்கள். நானும் அவர்களுடன் ஓடினேன். பொலிசார் சந்தியில் மக்களை நோக்கிச் சுட்டனர். நாங்கள் வீட்டுக்குள் புகுந்து தப்ப எத்தனித்தோம். எனது வலது முழங்காலில் குண்டுபட்டது. அங்கு நின்றவர்கள் என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனுர்கள். 4 பொலிசார் அப்போது சுட்டுக்கொண்டிருந்தார்கள். ஆஸ்பத்திரியில் முழங்காலுக்கு கீழ் என் காலை வெட்டி எடுத்துவிட்டார்கள்.

பொலிஸார் வந்தஉடனே கூட்டத்தினரை நோக்கி சுட்டார்கள்.

கையில் காயமடைந்த யாழ். வீதியைச் சேர்ந்த தியாகராசசூரியகுமார் கூறியதாவது: [வயது 17] நான் அலுமினியம் தொழிற்சாலையில் கடமை புரிகிறேன். 16ம் திகதி காலை ஸ்ரான்லி வீதியால் வேலைக்கு சென்றுகொண்டிருந்தேன். பொலிசார் தாக்குவதாக சொல்லிக்கொண்டு பலர் ஓடிவந்தார்கள். நானும் அவர்களுடன் ஓடினேன். ஸ்ரான்லி வீதிப்பக்கமாக ஓடினேன்.

## வலது கையில் காயம்

நான் வெலிங்டன் சந்தியைக் கடக்கும்போது கையில் குண்டுபட்டது. பொலிஸார் சுட்டுக்கொண்டிருந்தனர். நான் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டிற்கு ஓடினேன். சிலர் என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள் வலதுகையில் 'பிளாஸ்டர்' போடப்பட்டிருக்கிறது. மீண்டும்சத்திரசிகிச்சை செய்யவேண்டும், இப்பவும் ஆஸ்பத்திரியில்தான் இருக்கின்றேன். ஆஸ்பத்திரியில் இருந்துதான் இங்கு சாட்சியமளிக்க வந்தேன்.

இன்று வரை நான் வேலைக்குச் செல்லவில்லை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவகுரு கைலாசபிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

ஆகஸ்ட் 16-ந் திகதி காலை 10 மணிக்கு கார் உதிரிப்பாகங்கள் வாங்க பூவிலிங்கம் கருச்சுக்குப் போனேன் பின் ஆஸ்பத்திரி வீதிக்குப் போனேன் அண்ணு கோப்பி பாருக்கு அருகில் நின்றபோது வலது கையில் குண்டுபட்டது பொலிசார் அங்கு நின்றனர் இன்ஸ்பெக்டர்களும்நின்றனர் 10 யார் தூரத்தில் நின்று பொலிசார் சுட்டனர் 2 இன்ஸ்பெக்டர்களும் 6 கான்ஸ்டபிள்களும் நின்றனர்

அப்போது அங்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ அமிர்தலிங்கமும், யாழ்ப்பாணம் எம் பி திரு வி யோகேஸ்வரனும் நின்ருர்கள் பொலிசார் திரு அமிர்தலிங்கத்தை அடித்தவுடன் இந்த துப்பாக்கிச் சூடு நடந்தது பின் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன் என் வலது கை பாவிக்க முடியாது பலம் இழந்துவிட்டது

## சுடவேண்டாம் என்றனர்

இன்ஸ்பெக்டர்கள் ""சுடவேண்டாம்'' என்று தடுக்கவும், பொலிசார் அதனை அலட்சியப்படுத்திவிட்டு எங்களை நோக்கிச் சுட்டனர் பொலிசார் சிவில் உடை அணிந்திருந்தார்கள் காக்கி கால்சட்டையும், ரிசேட்டும் அணிந்திருந்தனர் சிலர் யூனிபோமுடன் நின்றனர்

## கடைகள் திறக்கவில்லை

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த செல்லத்துரை கோபாலகிருஷ்ணன் கூறியதாவது!

நான் கடையில் வேலை செய்கின்றேன் காலை 8-30 மணிக்கு வேலைக்குப்போனேன் கடை திறக்கப்படவில்லை மற்றக் கடைகளைப் பொலிசார் தாக்கி சேதப்படுத்தியதால் பயம் காரணமாக எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன நான் திரும்பி வீட்டுக்குப் போக கஸ்தூரியார் வீதியால் பஸ் நிலையத்திற்கு நடந்து சென்றேன் ஆட்கள் விரைவாக நடந்துபோவதை அவதானித்தேன் அப்போது எனது கையில் குண்டுபட்டது உள்ளங்கையை குண்டு துளைத்து விட்டது கஸ்தூரியார் வீதியால் சென்று மின்சாரநிலைய வீதிக்குத் திரும்பும்போது சூடு விழுந்தது. கைநீட்டமுடியாது. விரல்களை விரிக்கவும் முடியாது அந்தக் கையில் பலம் குன்றிவிட்டது.

6 பொலிசார் மக்களைநோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். அப்

(6-ம் பக்கம் பார்க்க)

RIO Daily 4 Shows
(Jaffna) Last Few Days
HIGH
VELOCITY

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-0
சிவாஜி - வாணிஸ்ரீ
சிவகாமியின
செல்வன்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-45,
நினைத்ததை
முடிப்பவன்

வெஸ்லி
(நாவிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெய்சங்கர் - சுஜாதா
நீ ஒரு மகாராணி

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
கணவன்

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ போன் 7693
(யாழ். நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

# "அமிர்தலிங்கத்தை பொலிஸார் தாக்கியதும் மக்கள் கொந்தளித்து சத்தம்போட்டனர்"

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இறுதுநேரத்தில் திரு.அமிர்தலிங்கமும், மானிப்பாய் எம். பீ. திரு. தர்மலிங்கமும், முன்னாள் மேயர் திரு. சி. நாகராசாவும் பழைய மார்க்கட்டை போய் பார்க்கவிரும்பினோம். அன்று மாலை உயர் அதிகாரிகள் குழுவரவிருந்தது. அக்குழுவிடம் முழுவிபரங்களையும் சமர்ப்பிக்கவிருந்தோம்.

**துப்பாக்கிகளை நீட்டினார்கள்**

காரில், பழைய மார்க்கட்டுக்குச்சென்றோம். ஆஸ்பத்திரிக்கு வெளியில் ஒரு கூட்டம் நின்றது வீதி கற்களால் தடுக்கப்பட்டிருந்தது. நாங்கள் அவர்களைத் தாண்டிச் சென்றோம். 15 யாருக்கு அப்பால், 15 அல்லது 20 பொலிஸார் அணிவகுத்து துப்பாக்கியுடன் நின்றார்கள். நாங்கள் கிட்டச்சென்றதும், எங்களை நோக்கி துப்பாக்கிகளை நீட்டினார்கள். நாங்கள் காரை நிறுத்தினோம் பின் பக்கம் போனோம். தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் குணசேகர சுடவேண்டாம் எனக் கூறிக்கொண்டு ஓடிவந்தார். நாங்கள் காரிலிருந்து இறங்கி பொலிசாருக்கு கிட்ட சென்றோம். யூனிபோமுடன் நின்றார்கள். சிலருக்கு நம்பர் காணப்படவில்லை.

நாங்கள் நிலைமையைப்பார்க்கவிரும்பினோம் ஏ. எஸ். பி. நூர்டீனும், தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டரும் நின்றார்கள். குண்டுவீசப்பட்டதாக ஏ. எஸ். பி. கூறினார். குண்டு வீசப்பட்டதை கண்டீரா? என திரு. அமிர்தலிங்கம் ஏ. எஸ். பி யிடம் கேட்டார். தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் கூறியதாக சொன்னார். தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரிடம் குண்டுவீசியதை கண்டீரா எனக்கேட்டபோது இல்லை எனக் கூறினார். இவைகள் பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கவிருப்பதாக கூறினோம் 15 யார் தூரத்தில் மக்கள் கூட்டமாக நின்றனர். நான் அவர்களிடம் சென்று கலைந்துபோகுமாறு கூறினேன். அப்போது திரு. அமிர்தலிங்கம் பலத்த குரலில் ஏதோ கூறிக்கொண்டிருந்தார். இச்சம்பவம் பற்றி பிரதமரிடம் அறிவிக்கப்போவதாகக் கூறினார்.

**அமிருக்கும் தாக்குதல்**

நான் திரும்பிவந்து மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்திடம் என்ன நடந்ததென்று கேட்டேன். திரு. அமிர்தலிங்கம் பொலிசாரால் தாக்கப்பட்டுவிட்டார் என்று கூறினார். கொஞ்சதூரத்தில் நின்ற மக்கள் பொலிசார் திரு. அமிர்தலிங்கத்தை தாக்கியதைப் பார்த்து கொந்தளித்த நிலையில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

நான், மக்கள் கூட்டமாக நின்ற இடத்திற்கு சென்றேன். திரு. அமிர்தலிங்கம் தாக்கப்பட்டுவிட்டதாகவும் முன்னுக்குப்போகப் போவதாகவும் கூறினார்கள், அப்போதுதுவக்கு வெடிச் சத்தம் கேட்டது. 15 நிமிடம் கழித்தபின் நான் திரும்பிவந்ததும் பொலிசார் மக்களை நோக்கிச்சுட்டதாக அறிந்தேன். பின் வீட்டிற்குப் போனோம்.

**'எளிய நாய்களே'**

நண்பகல் 12 மணிக்கு திரு. அமிர்தலிங்கமும், திரு. கதிரவேலுப்பிள்ளையும், பிரதமருடன்போனில் தொடர்புகொள்ளமுயற்சித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது வெளியில் உள்ள மக்கள் மத்தியில் சலசலப்புஏற்பட்டது. நான் வெளியில் வந்ததும் 4 காக்கி உடைஅணிந்த பொலிசார் கிட்டவந்தார்கள். ஒருவர்வந்து 'எளிய நாய்களே இதற்கெல்லாம் நீங்கள்தான் பொறுப்பு' என்று கூறினார். நான் அவர்களை வீட்டிலிருந்து வெளியேறுமாறு கூறினேன். அவர்கள் போனபோது சிலர் வீட்டிற்குள்ளிருந்து கூச்சல்போட்டனர். ஜீப்பில் பலர்வந்து என்னைத் தகாதவார்த்தைகளால் திட்டினார்கள் அதன்பின் லீலா பேக்கரிக்கு முன்னால் மக்கள் கூடிநின்றார்கள் எனக் கேள்விப்பட்டேன். நான் அவ்விடத்திற்கு சென்றேன் லீலா பேக்கரிக்குகிட்ட கூட்டம் நின்றது, பேக்கரி உரிமையாளரை சந்தித்தேன் எவ்வித தீங்கும் நடக்காது என அவருக்கு உறுதியளித்தேன். ஏதாவது சம்பவம் நடந்தால் எனக்கு உடனே அறிவிக்குமாறும் கூறினேன்.

பின் ஆரியகுளம் சந்திக்கு நடந்து சென்றேன். நாகவிகாரைக்கு அருகில் சிலர் கூட்டமாக நின்றனர் அவர்களை கலைந்துசெல்லுமாறு கூறினேன். எவ்வித சம்பவமும் நடைபெறாதபடி பார்த்துக்கொள்ளுமாறும், விழிப்பாயிருக்குமாறும் மக்களை கேட்டுக்கொண்டேன்.

அன்று 2 மணிமுதல் 5 மணி வரை, கோப்பாய் எம். பி திரு எஸ்கதிரவேலுப்பிள்ளை, மானிப்பாய் எம்பி திரு வி தர்மலிங்கம் ஆகியோருடன் அதிகாரிகள் மாநாட்டுக்குச் சென்றோம்

17ம் தேதி காலை காயமடைந்தவர்களும், அகதிகளும் யாழ்ப்பாணத்திற்கு ரயிலில் வருவதாக அறிந்தேன் யாழ். ரயில் நிலயத்திற்கு சென்றோம் அங்கு மக்கள் திரண்டுநின்றனர். இபோச அத்தியட்சகருடன் தொடர்கொண்டு அவர்களை வீடுகளுக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்தேன். ரயில் நிலயத்தில் நின்ற கூட்டத்தினரை நானும் கோப்பாய் எம் பி யும் போகுமாறு கூறினோம். அவர்கள் அங்கு நின்றனர். நாங்கள் நாவற்குழி புகையிரத நிலைய அதிபருடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணம் வரும் ரயிலை அங்கு மறித்து, அதில் வரும் காயமடைந்தவர்களையும், அகதிகளையும் நாவற்குழியில் இறங்க ஏற்பாடுசெய்தோம் அங்கிருந்து அவர்களை பஸ்களில்அவர்களைவீடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தோம்.

19ந் தேதி காலை, உதவிப் பொலிஸ் அதிபர் தர்மராசா, யாழ்ப்பாணம் இணைப்பு அதிகாரி காரியாலயத்தில் நியமிக்கப்பட்டார். அவர் என்னுடன் தொடர்புகொண்டு கிங்ஸ் ஹவுஸில் நடைபெறவிருக்கும் மகாநாடு ஒன்றுக்கு வருமாறு அழைத்தார். பொலிஸாரின் நடத்தைகள் பற்றிப் போதிய அனுபவமுண்டென்றும், 6 மாதத்திற்கு முன் பொலிஸாரால் தாக்குதலுக்குள்ளான காரில் சென்றவர்களில் நானும் ஒருவனென்று கூறி, வரமுடியாத நிலையிலிருப்பதாகக் கூறினேன். கட்டாயம் வரும்படியும், தேவையானால் தனது ஜீப்பை அனுப்புவதாகவும், எச்சம்பவமும் நடக்காதெனவும் உறுதியளித்தார் நான் எப்படியும் வருவதாகக் கூறினேன்.

**பொலிஸார் கூச்சலிட்டனர்**

வழியில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என், நவரத்தினமும் வந்தார். அவருடன் கிங்ஸ் ஹவுஸில் நடந்த மகாநாட்டிற்குச் சென்றேன். பொலிஸ் நிலயத்திற்குச் சமீபத்தில் சென்றதும் பொலிஸார் கூச்சலிட்டுக்கொண்டு ஓடிவந்தனர் இச்சம்பவத்தை மகாநாட்டில் இணைப்பு அதிகாரி திரு ருத்ரா ராஜசிங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தோம். இப்படியான சம்பவம் இனிமேல் நடக்காமல் பார்த்துக்கொள்வதாக அவர் எங்களுக்கு உறுதி அளித்தார்.

நாங்கள் மகாநாட்டை முடித்துக்கொண்டு திரும்பி வரும் வழியில், பொலிஸார் கிங்ஸ் ஹவுஸ் வாசலில், முறையாகத் திட்டமிட்டதுபோன்று அணியாக நின்று பொலிஸ் நிலயம் வரை கூச்சலிட்டனர். நாங்கள் வீட்டிற்கு வந்ததும் இச்சம்பவம் பற்றிப் பொலிஸ் அதிபர் திரு. சுந்தரலிங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தோம்.

26ந் தேதி அதிகாலை 1-40 மணிக்கு மின்சாரநிலயத்தில் இருந்து பஸ்நிலயத்திற்கு முன்பாகவுள்ள கடைகள் எரிவதாகப் போன் செய்தார்கள். அன்று ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. நான் அங்கு உடனே வருவதாகக் கூறினேன், நான் உடனடியாக ஆஸ்பத்திரிக்குப் போன் செய்து, என் வீட்டிற்கு முன்பாகவுள்ள தாதிமார் பயிற்சிக் கல்லூரிக் 'கேற்'றைத் திறந்துவிடுமாறு கூறினேன். ஆஸ்பத்திரிஊடாகச் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றேன். நெருப்பு ஆஸ்பத்திரிக்குப் பரவிவிடுமென்ற அச்சம் நிலவியது. நெருப்பை அணைக்க முயற்சிகள் நடைபெற்றன. இராணுவத்தினர் தீயை அணைப்பதில்ஈடுபட்டிருந்தனர் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. குணசேகராவும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் அங்கு நின்றார்கள். காலை 4 30 மணியளவில் தீ அணைக்கப்பட்டு, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது."

அரச சட்டத்தரணியின் கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கையில் திரு. யோகேஸ்வரன் கூறியதாவது: "பொலிஸார் மூன்று தடவை என் வீட்டிற்கு வந்தனர். முதலாவதாக 16ந் தேதி காலை 9-30 மணிக்கு. பின் 12 மணிக்கு, பின்னர் 17ந் தேதி வந்தனர். மூன்றும் முறை வரும்போது நான் வீட்டில் இல்லை. இளைஞர்கள் நின்றனர். வீட்டு வாசலில் இளைஞர்கள் கூடி நின்றனர். பொலிஸார் வந்ததும் இளைஞர்கள் சயிக்கிள்களை வீதியருகில் போட்டுவிட்டு உள்ளே ஓடிவந்தனர். பொலிஸார், அவ்வீதி வழியாக வந்த பஸ்ஸை சயிக்கிள்களுக்கு மேலாகச் செலுத்துமாறு சாரதியைப் பணித்தனர்.

யாழ்ப்பாணத்தில் பௌத்த விகாரைகள் எதுவும் சேதப்படுத்தப்படவில்லை என்று கேள்வியொன்றுக்குப்பதிலளிக்கையில் திரு. யோகேஸ்வரன் கூறினார். யாழ்ப்பாணத்தில் இந்துக் கோயில் எதுவும் சேதப்படுத்தப்படவில்லை" என்றும் அவர் கூறினார். (ஸ)

---

## பொலிசார்..

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

போதுதான் எனக்கு குண்டு பட்டது நான் உடனே கஸ்தூரியார் வீதியால் திரும்பி ஓடினேன். சில நண்பர்கள் என்னை டாக்டர் கங்காதரனிடம் கூட்டிச் சென்றார்கள். அவர் என்னை உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதித்தார். என் குடும்பத்தில் உழைக்கக்கூடிய ஒரே ஒருவன் நான்தான். என் தந்தைக்கு வயது 60, அவர் வேலை எதுவுமின்றி இருக்கிறார். என் தாயாருக்கு 52 வயது 2 சகோதரிகள் இருக்கிறார்கள். எல்லாரையும் நான்தான் உழைத்துக்காப்பாற்ற வேண்டும்.

விசாரணை இன்று காலை 9-30 மணிக்கு தொடர்ந்து நடைபெறும், [ஸ]

---

## சிலர் பஸ்ஸில்...

[2-ம் பக்கத்தொடர்ச்சி]

டுக்கொண்டு ஓடி வந்தனர். பின் 9-30 மணியளவில் யாழ் அரசாங்க அதிபர் திரு விஜயபாலா வந்தபோது பொலிசார் கூச்சலிட்டனர். பொலிஸ்நிலயத்திலிருந்து வாடி வீடுவரை கூச்சல்போட்டனர். ஏ. எஸ். பி. பின்வந்த போதும் பொலிசார் கூச்சலிட்டனர்.''

பொலிஸ் நிலயத்திலிருந்து வெளியே கடமைக்கு செல்லும் போது. பெயரும் றைபிளின் நம்பரும் தகவல் புத்தகத்தில் பதியப்பட வேண்டுமென்றும் திரு தாமோதரம்பிள்ளை கூறினார்.

தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டவர்றைபிளுடன் சிவில் உடையில் ஜீப்பில் செல்வது பற்றி தான் அந்நேரம் எதுவும் செய்யவில்லையென்றும் அவர் கூறினார்.

யுனைட்டெட் கிளப்புக்குத் தீவைக்கப்பட்டது பற்றியும், முனியப்பர்கோவில் சேதமடைந்ததுபற்றியும், தான் அறிந்து கொண்டதாகவும்திரு. தாமோதரம்பிள்ளை கூறினார்.

கமிஷனர்: முனியப்பர் கோவில் எங்கே இருக்கிறது?

இன்ஸ்பெக்டர்: அருகில் தான் இருக்கிறது.

**டி. ஐ. ஜி கூறியது**

கோண்டாவில் இ போ ச டிப்போ அத்தியட்சகர் திரு என் தியாகராசா சாட்சியமளிக்கையில், கச்சேரியில் நடந்த மாநாட்டின்போது, டி ஐ ஜி அனே செனரத்தின யாழ்வளாகத்திலுள்ள சிங்கள மாணவர்கள் தாக்கப்பட்டால் தென்னிலங்கையிலுள்ள தமிழர்கள் கொல்லப்படுவார்கள் எனக் கூறியதாக தெரிவித்தசர்.

பொலிசாரால் இ போ ச ஊழியர்கள் தாக்கப்பட்டதாகவும், இது பற்றி புகார் செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஆகஸ்ட் கலவரத்தின்போது ஒரு காலை இழந்த என் வரதராசா, வலதுகையில் குண்டடிபட்ட சிவகுரு கைலாசபிள்ளை, வலதுகையில் குண்டுபட்ட செல்லத்துரை கோபாலகிருஷ்ணன், தியாகராசாசூரியகுமார் ஆகியோர் தமிழில் சாட்சியமளித்தனர். இவற்றை முதலியார் கந்தசாமி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

இன்ஸ்பெக்டர்தாமோதரம்பிள்ளை சார்பில் சட்டத்தரணி த சோமசுந்தரம் ஆஜரானார்.

விசாரணை இன்று காலை 9-30 மணிக்கு தொடர்ந்து நடைபெறும். [ஸ]

---

## சுவீடன் நிருபர்கள் அமிருடன் பேட்டி

[வட்டுக்கோட்டை]

சுவீடன் தேசத்துப் பத்திரிகை நிருபர்கள் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை அவரது மூளாயிலுள்ள இல்லத்தில் சந்தித்து உரையாடினர். இவர்கள் தமிழ் மக்களின் பிரச்னைகள் சம்பந்தமான பல கேள்விகளைக் கேட்டு அவற்றை ஒலிப்பதிவும் செய்தனர்.

---

## சகல—

[5ம் பக்கத் தொடர்ச்சி]

தலையைத் தூண்டியுள்ளது,

**நாடு முழுவதும்**

"இந்துக் கோவில்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் கட்டுப்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு மாகாணங்களிலும் இந்துக்கோயில்களும் இந்துக்களும் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வருவதற்கு வேண்டிய உதவிகளை வழங்கத் தயாராக இருக்கிறேன்.''

**டாக்டர் சாட்சியம்**

டாக்டர் பிலிப் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் நடந்த கார்ணிவல், றோட்டரிகிளப்பாலும், சென். பற்றிக்ஸ்கல்லூரி பழைய மாணவர்களாலும் நடாத்தப்பட்டது. நான் பழையமாணவர் சங்க உப-தலைவர் என்றமுறையில், பொறுப்பாக இருந்தேன். கார்ணிவல் ஆகஸ்ட் 10ம்தேதி வரை நடைபெறவிருந்தது. பின் 3 நாள் நீடிப்பதற்கு அனுமதி பெற்று நீடிக்கப்பட்டது.

12ம் தேதி சில பொலிசார் வந்து, கார்ணிவலுக்கு டிக்கட்டின்றி உள்ளேபோகமுயன்றார்கள். வாசலில் நின்ற திரு. குலநாதன் அவர்களை சிறுவர்களுக்குரிய 1 ரூபா டிக்கட்டாவது எடுத்துச் செல்லுமாறும், இக்கார்ணிவல், ஒரு நல்ல நோக்கத்திற்காக நடத்தப்படுவதாகவும்கூறினார். அதன்பின் அவர்கள் டிக்கட் எடுத்து உள்ளே சென்றனர்.

உள்ளே சென்றதும் பொலிசார் வாசலில் நின்றவருடன், தேவையற்ற விதத்தில் கதை கொடுத்தார்கள். இதனால் மக்கள் கூடி பொலிசாரைத் தாக்கும் நிலைஏற்பட்டது. வாசலில் நின்றவர் அதனைத் தடுத்து நிறுத்திவிட்டார்.

**எஸ்.பி.யுடன் தொடர்பு**

மறுநாள் காலை எஸ் பி யுடன் தொடர்பு கொள்ள முயன்றேன். பின் யாழ்ப்பாணம் எம் பி யிடம் நடந்தவற்றைக்கூறி, இனிமேல் பொலிசாரை கார்ணிவலுக்கு அனுமதிக்காமல் ஏற்பாடு செய்யுமாறு கூறினேன். தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரின் கவனத்திற்கும் இவ்விஷயம் கொண்டுவரப்பட்டது பொலிசாருக்கு கார்ணிவலுக்குபோக வேண்டாமென்று எஸ் பி உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மற்ற பொலிஸ் நிலயங்களுக்கும் தகவல் அனுப்புவதாகவும் கூறப்பட்டது.

கடைசிநாள் கார்ணிவலுக்குள் சத்தம் கேட்டது. நான் காரியாலத்திலிருந்து வெளியில் வந்தபோது 2 பேர் இரத்தத்துடன் காணப்பட்டனர். சிவில் உடையில் வந்த இரு பொலிசார் தாக்கப்பட்டதாக அறிந்தேன். அதன்பின் மக்கள்கூட்டம், கலைந்துசென்றது. அவர்கள் ஆனைக்கோட்டை, சாவகச்சேரிபொலிசைச் சேர்ந்தவர்கள்யழ்ப்பாணம்பொலிஸ் நிலயத்தைச் சேந்தவர்கள் அல்ல."

---

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் தொடபனதார்க்காக யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி... மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka